**R.C.S.NO.55/2023 IN CMP. NO.795/2024** **நாள்.23.09.2024.**

**பூபதி,(வயது 38) த/பெ.வெங்கடாசலம், தனம் நகர், பேஸ் 2 மயிலம்பட்டி, சின்னியம்பாளையம், கோயமுத்தூர் என்ற முகவரியில் வசித்து வருபவரின் சத்திய பிரமாண வாக்குமூலம்.**

1) நான் கோயமுத்தூரில் குடியிருந்து சிவில் சூப்பர்வைஸராக உள்ளேன். புகார்தாரர் சந்திரசேகர் என்பவரை தெரியும். நான் புகார்தாரர் சந்திரசேகர் என்பவரிடம் சிவில் சூப்பர்வைஸராக வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் புதிய கட்டிடம் கட்டுவதற்காக அனுமதி பெறவேண்டி கோயமுத்தூரில் உள்ள டவுன் பிளானிங் அலுவலகத்திற்கு செல்வார். 2012-ம் ஆண்டு முதல் 2015-ம் ஆண்டுவரை டவுன் பிளானிங் அதிகாரியாக இருந்த வரதராஜன் என்பவர் புகார்தாரருடன் பழக்கம் ஆனார். வரதராஜனுக்கு பாத்தியப்பட்ட வீடு கரூர் காயத்திரி நகரில் உள்ளது. அந்த வீட்டிற்கு பழுது பார்க்கவும், வர்ணம் பூசுவதற்காகவும், கூடுதல் கட்டுமானம் செய்யவும் வேண்டி புகார்தாரரிடம் மேற்படி வேலையை செய்யச் சொன்னார். மேற்படி வேலையை சுமார் ரூ.25,00,000/- மதிப்பில் புகார்தாரர் தனது கையிலிருந்த தொகையை கொண்டு ஜுன் 2014 முதல் ஆகஸ்ட் 2014 வரை செய்து முடித்தார். அதன் பிறகு புகார்தாரர் மேற்படி எதிரி வரதராஜனிடம் ரூ.25,00,000/-ஐ கேட்டார். ஆனால் வரதராஜன் தர மறுத்துவிட்டார்.

2) இந்நிலையில் கடந்த 14.09.2019 அன்று நானும் புகார்தாரரும், மற்றொரு அலுவலரான ராமமூர்த்தி என்பவரும் மேற்படி தொகை குறித்து விசாரிக்க கரூரிலுள்ள எதிரியின் வீட்டிற்கு காலை சுமார் 08.00 மணியளவில் சென்றோம். காலிங் பெல் அழுத்தி கூப்பிட்டபோது வரதராஜனும், அவரது மனைவியும் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்து காலைலயே வந்துட்டீங்களாடா, தேவுடியா பசங்களா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார். புகார்தாரர் வரதராஜனிடம் தனக்கு கொடுக்க வேண்டிய தொகை குறித்து கேட்டார். அதற்கு வரதராஜன் காசெல்லாம் தரமுடியாது, இனிமேல் பணம் கேட்டு இங்கு வந்தால் ஆள் வைத்து

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

அடித்து கை, காலை முறித்து கொன்று விடுவேன் என்று மிரட்டினார். அதற்கு புகார்தாரர் இவ்வாறு பேசவேண்டாம் என்றும், தனக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுத்து விடுங்கள் என்றும் கேட்டார். அதற்கு எதிரி வரதராஜனும், அவரது மனைவி சாந்தியும் கீழே கிடந்த கட்டையை எடுத்து புகார்தாரரை அடிக்க வந்தார்கள். நாங்கள் அங்கிருந்து ஓடிவந்துவிட்டோம். புகார்தாரர் உடனே 100 க்கு போன் செய்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சொன்னார்கள். புகார்தாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். நான் காவல் நிலையம் செல்லவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

**R.C.S.NO.55/2023 IN CMP. NO.795/2024** **நாள்.23.09.2024.**

**ராமமூர்த்தி,(வயது 55) த/பெ.நாராயணசாமி, 13/1 ஐ.டி, அவென்யூ, சிவசக்தி நகர், சரவணம்பட்டி, கோயமுத்தூர்-35 என்ற முகவரியில் வசித்து வருபவரின் சத்திய பிரமாண வாக்குமூலம்.**

1) நான் கோயமுத்தூரில் குடியிருந்து புகார்தாரர் நடத்தி வரும் பில்டிங் கான்ட்ராக்ட் அலுவலகத்தில் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2012ம் ஆண்டிலிருந்து 2015-ம் ஆண்டுவரை கோயமுத்தூர் டவுன் பிளானிங் அலுவலகத்திற்கு கட்டிட அனுமதி பெறுவதற்காக புகார்தாரர் சென்றுவந்த வகையில் அங்கு டவுன் பிளானிங் அதிகாரியாக பணிபுரிந்த எதிரி வரதராஜன் என்பவருடன் புகார்தாரருக்கு பழக்கம் ஏற்பட்டது. எதிரி வரதராஜனுக்கு கரூரில் காயத்திரி நகரில் சொந்தமாக வீடு உள்ளது. அந்த வீட்டை பழுது பார்க்கவும், கூடுதல் கட்டுமானம் செய்யவும், வர்ணம் பூசவும் வேண்டி புகார்தாரரை கேட்டுக்கொண்டார். அதன்படி புகார்தாரர் ஜுன் 2014 முதல் ஆகஸ்ட் 2014 வரை மேற்படி வேலையை சுமார் ரூ.25,00,000/- மதிப்பில் செய்து முடித்தார். அதன்பிறகு புகார்தாரர் எதிரி வரதராஜனிடம் நேரிலும், போனிலும் மேற்படி தொகையை கொடுக்கும்படி கேட்டார்.

2) ஆனால் வரதராஜன் பணத்தை கொடுக்கவில்லை. அதனால் நானும், சந்திரசேகர், சூப்பர்வைஸர் பூபதி ஆகியோர் கரூரிலுள்ள எதிரி வரதராஜனின் வீட்டிற்கு காலை 08.00 மணியளவில் சென்றோம். புகார்தாரர் காலிங்பெல்லை அழுத்தியபோது வரதராஜும், அவரது மனைவி சாந்தியும் வெளியே வந்து எதற்காக வந்தீர்கள் என்று கேட்டார்கள். தனக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்கும்படி சந்திரசேகர் கேட்டார். அதற்கு எதிரி புகார்தாரரை பார்த்து பரதேசி, தேவுடியா பயலே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி பணத்தை கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார். அதற்கு புகார்தாரர் அவ்வாறு சொல்லாதீர்கள் எனவும், தான் செலவு செய்த தொகையை கொடுத்துவிடும்படியும் கேட்டுக்கொண்டார். அதற்கு எதிரி வரதராஜன் இனிமேல் பணத்தை கேட்டு வந்தால் அடியாட்களை வைத்து கை, கால்களை முறித்து கொலை செய்து விடுவதாக மிரட்டினார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.

3) பின்னர் எதிரியும் அவரது மனைவி சாந்தியும், வீட்டிற்கு அருகில் கிடந்த கட்டையை எடுத்து, எங்களை தாக்க முற்பட்டனர். நாங்கள் அங்கிருந்து ஓடிவந்தோம். பின்னர் புகார்தாரர் 100 க்கு போன் செய்தார் . போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து புகார்தாரரை விசாரித்து கரூர் டவுன் காவல் நிலையம் வந்து புகார் மனு அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி புகார்தாரர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். நானும் பூபதியும் கோயமுத்துார் வந்துவிட்டோம்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.